சென்னை அரசாங்கத்தின்

# கடைகள், கடை சிப்பந்திகள் சட்டம்.

★

4 MAY 1948
MADRAS

சென்னை அரசாங்கத்தின் 1947-ம் வருஷத்திய
36வது சட்டம்.

1998

★

Z211,(X:9)
N48
113616

ாடி பதிப்பகம்,
★ திருச்சி ஜில்லா.

தியாகக்கொடி வெளியீடு 6
முதல் பதிப்பு ஏப்ரல் 1948
விலை அணா ஆறு

113616

# எமது நன்றி

ஆகஸ்டு பதினைந்தாம் தேதிக்குப் பின்னர் தேசத்திலே ஏற்பட்டுள்ள புது விழிப்பிற்கும் மாறுதலுக்கும் இச் சட்டம் ஒரு எடுத்துக்காட்டு. தேசத்திற்காக உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணம் செய்த தலைவர்கள் அரசாங்கப் பொறுப்பை ஏற்ற உடனேயே மக்கள் நலனில் எந்தெந்த வகையில் என்னென்ன நன்மைகளைச் செய்யலாம் என்று அல்லும் பகலும் சிந்தித்து வருகிறார்கள்.

இந்நிலையில் பொதுஜன ஆதரவும் அன்பும் அபரிமிதமாகப் பெற்ற நமது சென்னை சர்க்கார் கொண்டு வந்துள்ள ஒரு சிறு சட்டமே இந்த சென்னை மாகாண ஷாப் சட்டமாகும்.

நமது காங்கிரஸ் சர்க்கார் இம்மாகாண ஏழை மக்கள் மீது எத்துணை பரிவும் அக்கறையும் கொண்டுள்ளனர் என்பதற்கு இச் சட்டம் ஒரு உதாரணமே.

இச் சட்டம் தொழிலாளிக்கும் முதலாளிக்கும் ஒருங்கே நன்மை பயப்பதாகும். மனிதனுடைய அறிவு வளர்ச்சிக்கும் சிந்தனை சக்திக்கும் ஓய்வு தேவை. அந்த ஓய்வை இரு சாரார்க்கும் இச்சட்டம் நல்குகிறது.

இந்த மாகாணத்தின் இணையற்ற பிரதமர் கனம் ஓமந்தூர் ரெட்டியாருக்கு இச்சட்டத்தின் மூலம் கடைசிப்பந்திகளும் முதலாளிகளும் மிகவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். அன்னாரின் சீர்திருத்த ஆர்வத்திற்கு இச்சட்டமே ஒரு அத்தாக்ஷியாகும்.

இந்த மந்திரி சபை மேலும் நீண்ட நாள் பதவியிலிருந்து மக்களுக்கு இதுபோன்ற நன்மைகளையும் சீர்திருத்தங்களையும் வழங்கவேண்டுமென்று வாழ்த்துகிறோம்.

- மொழிபெயர்ப்பாளர்

ஸ்டார் பிரஸ், துறையூர்

# முன்னுரை

தொழிலாளர்களின் வேலை நேரத்தைக் குறைக்கவும் பொதுவாக அவர்களுடைய நிலைமையை உயர்த்தவும் இந்த சட்டம் இயற்றப்பட்டது.

இதனுடைய முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு:

வேலையாட்கள் ஒரு தினம் எட்டு மணிக்கு மேல் வேலை செய்யவேண்டியதில்லை. (செக்ஷன் 9, 14) வாரத்தில் ஒரு நாள் கட்டாய விடுமுறை உண்டு. (செ. 11, 16). 12 மாதம் தொடர்ச்சியாக வேலை செய்த பிறகு அடுத்த 12 மாதத்தில் 12 நாள் சம்பளத்துடன் லீவு உண்டு. இதைத்தவிர ஒவ்வொரு வருஷமும் 12 நாள் வியாதியாயிருக்கும்போது சம்பளத்துடன் லீவும், 12 நாள் சம்பளத்துடன் காஷ்வல் லீவும் உண்டு (செ. 25). ஆறு மாதம் தொடர்ச்சியாக வேலை செய்தவர்களை காரணம் இல்லாமல் ஒரு முதலாளி வேலையை விட்டு நீக்கக்கூடாது. அப்படி நீக்கினால் சர்க்காரால் நியமிக்கப்பட்டிருக்கும் அதிகாரிக்கு அப்பீல் செய்ய உரிமையுண்டு. (செ. 41)

இந்த சட்டம் எத்தகைய வேலையாட்களை கட்டுப்படுத்தாது என்பதை செக்ஷன் 4 கூறுகிறது.

சட்டத்தின் பிரகாரம் ஷிப்டு முறையில் வேலையாட்களை வைத்திருப்பதைப்பற்றி தடையில்லை. ஒவ்வொரு வேலையாளுக்கும் நாலு மணி நேரம் வேலை, ஒரு மணி நேரம் ஓய்வு காலம்; பிறகு நாலு மணி நேரம் வேலை

இருக்கும்படி இரண்டு ஷிப்டில் வேலையாட்களை வைத்து காலை 8 மணியிலிருந்து இரவு 9 மணி வரையில் கடை வைத்திருப்பதை சட்டம் தடைசெய்யவில்லை. செக்ஷன் 9 பிரகாரம் கடை எந்த மணிக்கு முன்னதாக திறக்கக் கூடாது. எந்த மணிக்கு பின் திறக்கக்கூடாது என்று மாகாண சர்க்கார் உத்திரவிடலாம். ஆயினும், அது இன்னும் உத்தரவிடப்படவில்லை.

காபிகிளப், ஹோட்டல் இவற்றைப்பொறுத்து வார விடுமுறை கட்டாயம் இல்லை. ஆனல் சிப்பந்திகளுக்கு மட்டும் வார விடுமுறை கொடுக்கப்பட வேண்டும். கடைகளைப்போலவே ஷிப்டு முறையில் வேலையாட்களை நியமித்து காபிகிளப் அல்லது ஹோட்டல்கள் காலை 5 மணியிலிருந்து இரவு 10 மணி வரையிலும் கூட திறந்திருக்க சட்டத்தில் தடை இல்லை.

சில காபிகிளப், காலை 6 மணியிலிருந்து 10 மணி வரையில் மாலை 3 மணியிலிருந்து இரவு 7 மணி வரையில் என்று, திறந்திருக்கும் நேரத்தை நிர்ணயித்திருக்கின்றன. இது செக்ஷன் 15-க்கு விரோதமானது. வேலை ஆரம்ப மணியிலிருந்து வேலை முடியும் மணி வரையில் உள்ள இடைக்காலம் 12 மணிக்கு மேற்படக்கூடாது ஆகையால் ஷிப்டு முறையில் வேலையாட்கள் இல்லாவிட்டால் இது சட்டவிரோதம்.

இதேமாதிரி ஒரு கடை திறந்திருக்கும் நேரத்தை காலை 8 மணியிலிருந்து 12 மணி; மாலை 5 மணியிலிருந்து 9 மணி வரையிலும் என்று நிர்ணயிக்கக்கூடாது.

14 வயது பூர்த்தியாகாதவர்களை வேலையாட்களாக நியமிக்கக்கூடாது (செ 17). 17 வயதுக்கு உட்பட்டவர்களாய் 14 வயதுக்கு மேற்பட்ட வேலையாட்களிடம் தினம் 7 மணிக்கு மேல் வேலை வாங்கக்கூடாது. (செ. 18)

வேலையாட்களுக்கு கிடைக்கவேண்டிய சம்பளம் ஒழுங்காக கொடுக்கப்பட வேண்டியதைப்பற்றி சட்டம் வற்புறுத்துகிறது. (7-ம் அத்தியாயம்). சம்பளம் கொடுக்கப்படாவிட்டால் இந்த சட்ட சம்பந்தமாக நியமிக்கப்பட்ட இன்ஸ்பெக்டர் வேலையாள் சார்பாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். (செ. 28).

பாக்டரி இன்ஸ்பெக்டர்கள் நியமனம் சம்பந்தமாயும் செ. 7, 11(3)(a), 13, 16(2), விஷயமாகவும், சட்டத்தின்கீழ் பிறப்பிக்கும் ரூல்கள் விஷயமாயும், முதலாளிகள் வைத்திருக்கவேண்டிய ரிஜிஸ்டர்கள் முதலியவை விஷயமாகவும், இன்னும் இந்த சட்ட சம்பந்தமான மற்ற விஷயங்களைப்பற்றியும் கவர்ன்மெண்டார் காலக்கிரமத்தில் உத்திரவிடுவார்கள்.

இவை கெஜட்டில் பிரசுரம் ஆனதும் இச்சிறு புத்தகத்துக்கு அனுபந்தமாக எம்மால் வெளியிடப்படும்.

-பதிப்பாளர்.

# சென்னை அரசாங்கத்தின்

# கடைகள் கடைசிப்பந்திகள் சட்டம்.

## சென்னை அரசாங்கத்தின் 1947-ம் வருஷத்திய 36-வது சட்டம்.

**2-2-1948ல் கவர்னர் ஜெனரலின் அங்கீகாரம் பெற்றது.**

கடைகள், வியாபார ஸ்தலங்கள், காபிகிளப்புகள் சினிமா நாடக கொட்டகைகள், முதலியவற்றில் வேலை நிலைமையை கட்டுப்படுத்தவும் வேறு நோக்கங்களுக்கும் அவசியம் ஏற்பட்டதால், கீழ்க்கண்ட சட்டம் இயற்றப் பட்டது:-

1. இதை 1947ம் வருடத்திய சென்னை கடைகள், கடை சிப்பந்திகள் முதலிய சட்டம் என்று சொல்லலாம்.

2. சென்னை மாகாணம் முழுவதிலும் இது அமுலுக்கு வரலாம்.

3. (a) சென்னை நகருக்கும் முனிசிபல் நகரங்களுக்கும், பெரிய பஞ்சாயத்து போர்டுகள் எல்லைகளுக்குள் உள்ள கிராமங்களுக்கும் (பெரிய பஞ்சாயத்து போர்டுகள் எவை என்பதை மாகாண சர்க்கார் தீர்மானிப்பார்கள்) G. O. Ms, No 1323 டெவலப்மண்டு 17-3-48 பிரகாரம் 1-4-48இலிருந்து இது அமுலுக்கு வருகிறது.

(b) மாகாண சர்க்கார் இதை வேறு பாகங்களுக்கும் அமுலுக்கு வரும்படி விளம்பரம் செய்து உத்திர விடலாம்.

# அத்தியாயம் 1

## பீடிகை

2. இந்த சட்டத்தில் கீழ்க்கண்ட வார்த்தைகள் (சந்தர்ப்பத்திலும் சங்கதியிலும் முரண் இல்லாதபோது) கீழ்கண்ட அர்த்தம் உடையவை.

(1) 'சிறுவன்' என்பவன் 14 வயது பூர்த்தியாகாதவன் (சிறுவன் என்பது ஆண்பால் பெண்பால் இரண்டையும் குறிக்கும்)

(2) 'மூடப்பட்டது' என்பது வியாபார சாமான் வாங்குபவன் கடையில் சாமான் பெறுமலிருக்கும் நிலைமை அல்லது சிப்பந்திகள் தங்கள் வேலையை செய்யாமல் இருப்பது.

(3) 'வியாபார ஸ்தலம்' என்பது, கடைகளேயல்லாத விளம்பரம், கமிஷன், ஏற்றுமதி முதலிய தொழில்களைச் செய்யும் ஸ்தாபனங்களையும், ஒரு தொழிற்சாலையின் குமாஸ்தாக்கள் இலாகாவையும், இன்ஷியூரன்ஸ்கம்பெனி, பாங்கு, முதலியவற்றை குறிக்கும் இந்த சட்டத்தைப் பொறுத்து எவை 'வியாபார ஸ்தலம்' என்பதை மாகாண சர்க்கார் விளம்பரத்தின்மூலம் தெரிவிக்கலாம்.

(4) 'நாள்' என்பது ஒரு இரவு நடுநிசியிலிருந்து அடுத்த இரவு நடுநிசி வரையிலுள்ள 24 மணி காலம்.

ஆனல் நடு இரவிற்குப் பிறகும் வேலை செய்யும் நாடகம், சினிமா முதலிய தொழிலாளரைப் பொறுத்து 'நாள்' என்பது ஒருதினம். அவர்கள் தொழில் ஆரம்பிக்கும் காலத்திலிருந்து 24 மணி நேரம் ஆகும்.

(5) 'எஜமானர்' என்பது கடை, வியாபார ஸ்தலம், காபிகிளப், ஹோட்டல் இவற்றின் சொந்தக்காரர்களை யும், தொழிலாளர்களின் மீது வேலைவாங்குவதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் மானேஜர், எஜண்டு, முதலியவர் களேயும் குறிக்கும்.

(6) 'தொழிலாளர் வேலை செய்யும் ஸ்தாபனம்' என்பது கடை, வியாபார ஸ்தாபனம், காபிகிளப், ஹோட்டல், சினிமா, டிராமா கொட்டகைகள், பொழுது போக்குக்கான பாட்டுக்கச்சேரி முதலிய வேறு ஸ்தாபனங்கள் முதலியவற்றைக் குறிக்கும். இந்த சட்டத்தைப் பொறுத்து எவை 'தொழிலாளர் வேலை செய்யும் ஸ்தாபனம்' என்பதை மாகாண சர்க்கார் விளம்பரம் செய்து தெரிவிக்கலாம்.

(7) 'தொழிற்சாலை' (பாக்டரி) என்பது 1934-ம் வருடத்திய பாக்டரிகள் சட்டம் செ. 2 (f), 5 படி சொல்லப்படும் தொழிற்சாலைகள், தொழிற்சாலையென்பது 20 அல்லது 20-க்கு மேற்பட்ட நபர்கள் வேலை செய்யும் ஒரு இடத்தையும், இயந்திர அல்லது மின்சார சக்தியை உபயோகித்து வேலை செய்யும் இடத்தையும் குறிக்கும்.

(8) இந்த சட்ட சம்பந்தமாக 'இன்ஸ்பெக்டர்களை' மாகாண சர்க்கார் நியமிக்கலாம்.

(9) 'விளம்பரம்' என்பது போர்ட் செயிண்ட் ஜார்ஜ் கெஜட்டில் செய்யப்படும் 'விளம்பரம்'.

(10) 'திறந்திருத்தல்' என்பது சாமான் வாங்குபவர் வாங்கும்படியும், வாடிக்கைகாரர் பொருள் அல்லது பொழுதுபோக்கை அடையவும் இருக்கும் நிலைமை.

(11) 'வேலைக்காலம்' என்பது எஜமானனிடம் தொழிலாளி வேலை செய்யும் நிலைமையிலுள்ள காலம்

(12) 'வேலை செய்ய நியமிக்கப்பட்ட நபர்' என்பது.

(i) கடைகளை பொறுத்து, முற்றிலும் அல்லது முக்கியமாக வியாபாரத்துக்கு நியமிக்கப்பட்ட நபர்.

(ii) தொழிற்சாலைகளைப் பொறுத்து அவற்றில் குமாஸ்தா வேலை செய்பவன்.

(iii) வியாபார ஸ்தலத்தைப்பொறுத்து அதன் தொழிலுக்கு முக்கியமாக வேலைசெய்யும் நபர் பியூன்களும் இதில் அடங்கியவர்.

(iv) கிளப், ஹோட்டல் முதலியவற்றில் சரக்கு தயாரிப்பவர், பரிசாரகர், மேஜை, பாத்திரம் துடைப்பவர், குமாஸ்தா, காஷியர்.

(v) நாடகக் கொட்டகை முதலியவற்றில் ஆபரேட்டர், குமாஸ்தா, கேட்கீப்பர் முதலியவர்கள். மாகாண சர்க்கார் யார் இதில் சேர்ந்தவர்கள் என்பதைப் பொதுவாகவோ பிரத்தியேகமாகவோ விளம்பரம் செய்து உத்திரவிடலாம்.

(vi) ஒரு வியாபார அல்லது கிளப் முதலிய ஸ்தாபனத்தில் கட்டிடம் அல்லது அதன் பாகங்களைப் பெருக்கவும், சுத்தம் செய்யவும் முற்றிலும் அல்லது முக்கியமாக நியமிக்கப்பட்ட ஒருவரையும் இந்த சட்டம் கட்டுப்படுத்தும். ஆனால் முதலாளியின் உறவினராக இருந்து அவர் ஆதரவில் இருக்கும் மனைவி, மகன், தந்தை முதலிய உறவினர் இதில் அடங்காது.

(13) 'கடைப் பிடிக்க வேண்டியது என்பது' இந்த சட்டப்படி கடைப்பிடிக்க வேண்டிய விஷயம்.

(14) 'தங்கும் வசதியுள்ள ஹோட்டல்' என்பது பிரயாணிகளுக்கும் பொதுஜனங்களுக்கும் சாப்பாடும் தங்கும் இடமும் ஊதியம் பெற்று கொடுக்குமிடம்.

(15) 'காபிகிளப் அல்லது ஹோட்டல்' என்பது பொது ஜனங்களுக்கு முக்கியமாக அங்கு சாப்பிடும்படி தொழில் நடத்தும் இடம். ஆனால் நாடகக் கொட்டகை அல்லது சினிமா கொட்டகைக்காக இருக்கும் காபிகிளப் அல்லது ஹோட்டல் இதில் சேராது.

(16) 'கடை' என்பது வியாபாரம் செய்யும் இடம் இதில் அதைச் சேர்ந்த ஆபீசு, ஸ்டோர் ரூம், கிடங்கு முதலியவையும் அடங்கும். அவை கடைக்குள் இருந்தாலும் அதற்கு வெளியே இருந்தாலும் இதில் சேரும். ஆனால் காபிகிளப், ஹோட்டல், வியாபார சம்பந்தமான ஸ்தாபனங்கள் இதில் அடங்காது.

(17) 'கொட்டகை' என்பது முக்கியமாக சினிமா படங்களைக் காட்டவோ நாடகம் நடிக்கவோ ஏற்பட்ட இடம்.

(18) 'சம்பளம்' என்பது வேலை செய்வதற்காக ஒரு நபருக்கு கொடுக்கப்படும் ரூபாய் மதிப்புள்ள ஊதியம். இதில் போனசும் வேலையை விட்டு நீங்கும்போது கொடுக்கப்படும் அட்வான்சு சம்பளமும் சேரும்.

(a) ஆனால் மாகாண சர்க்காரின் உத்திரவுப்படி ஒரு வேலையாளுக்கு அளிக்கப்படும் குடியிருப்பு வசதி, தண்ணீர், லைட்டு, மருத்துவ வசதி முதலியவை சேராது.

(b) முதலாளியால் வேலையாளின் உபகாரச்சம்பளம், புரோவிடண்டு பண்டு இதற்காகக் கொடுக்கப்படும் பணப் பகுதி இதில் சேராது.

(c) பிரயாண அலவன்சு அல்லது பிரயாணம் செய்யும் வசதி இதில் சேராது.

(d) ஒரு வேலையாளுக்கு அவன் வேலை சம்பந்தமாக ஏற்படும் செலவுக்காக கொடுக்கப்படும் பணம் இதில் சேராது.

(e) வேலையை விட்டு நீங்கும்போது ஒரே தொகையாகக் கொடுக்கப்படும் உபகாரச் சம்பளத்தை இது குறிக்காது.

(20) 'சிறுவன்' என்பது 14 வயது பூர்த்தியானவன் ஆனால் 17 வயது பூர்த்தியாகாதவன்.

3. இந்த சட்டத்தில் சொல்லப்படும் காலம் இந்தியன் ஸ்டேண்டர்டு டயம் (அதாவது க்ரன்விச் டயத்திலிருந்து $5\frac{1}{2}$ மணிக்கு முன் உள்ள டயம்).

4. இந்த சட்டம் கீழ்க்கண்டவர்களைக் கட்டுப்படுத்தாது.

(a) ஒரு வியாபார அல்லது வேறு ஸ்தாபனத்தின் மானேஜர்

(b) பிரயாணம் செய்யும்படியான வேலையைச் செய்யும் வேலையாள், தொழில் அபிவிருத்திக்காக ஆர்டர்கள் வாங்க பிரயாணம் செய்யும் வேலையாள்.

(c) மாகாண, மத்திய அரசாங்க சிப்பந்திகள், ரிசர்வ் பேங்கு, ரயில்வே, ஸ்தல அரசாங்க சிப்பந்திகள்.

(d) சுரங்கம் எண்ணெய் ஊற்று இவற்றில் வேலை செய்யும் வேலையாட்கள்.

(e) சந்தை, திருவிழா முதலிய இடங்களில் தற்காலிக வியாபாரம், கிளப், ஹோட்டல் நடத்தப்படும் தொழி

வில் வேலை செய்பவர். ஆனால் சந்தை, அல்லது திருவிழா ஒரு சமயத்தில் 15 நாட்களுக்கு மேல் தொடர்ந்தாற் போல் நடக்கக்கூடாது.

(f) பாக்டரி ஆக்டு, அல்லது வேறு தனிப்பட்ட ஆக்டுகளால் கட்டப்பட்ட வேறு தொழில் ஸ்தாபனங்கள் (இவற்றைக்குறித்து வேலை நேரம் முதலியவை அந்தந்த சட்டங்களால் நிர்மானிக்கப்படும்)

2. வேலை நேரங்களைப் பொறுத்து இந்த சட்டத்தில் 7, 13 செக்ஷன்கள் கீழ்கண்டவற்றைக் கட்டுப்படுத்தாது.

(a) நோயாளிகள், அநாதை, வைத்தியம் முதலியவர் களைப் பராமரிக்கும் ஆஸ்பத்திரி முதலியன.

(b) மாகாண சர்க்கார் உத்திரவுப்படி விதிவிலக்கு செய்யும் மருந்து கடைகள்.

(c) பள்ளிக்கூடங்களுடன் இணைக்கப்பட்ட ஹாஸ் டல்கள் முதலியன.

(d) ரயில்வேஸ்டேஷன், துறைமுகம் இவற்றிலிருக் கும் கிளப், ஹோட்டல்கள் முதலியன.

5. செக்ஷன் 4 பிரிவு, (1) (c) (f) தவிர, மற்ற வேலைக்காரர்களுக்கும், செக்ஷன் 4 படி உள்ள விதி விலக்கு இருந்தபோதிலும், இச்சட்டம் அமுலுக்கு வரும் படி மாகாண சர்க்கார் விளம்பரம் செய்து உத்திரவிடலாம்.

(6) மாகாண சர்க்கார் குறிப்பிட்ட கடை அல்லது ஸ்தாபனங்களைப்பொறுத்து அவர்கள்குறிப்பிடும்நிபந்தனை களின்மேல் இந்த சட்டத்தைப் பொறுத்து விதிவிலக்கு செய்யலாம்.

# அத்தியாயம் 2

## கடைகள்

7. (1) மாகாண சர்க்காரால் குறிப்பிட்ட மணிக்கு முன்பாக ஒரு கடையும் திறக்கப்படக்கூடாது. மாகாண சர்க்கார் குறிப்பிட்ட மணிக்குப் பின்பு ஒரு கடையும் திறந்திருக்கக் கூடாது.

ஆனால் கடை மூடும் மணிக்கு முன்னதாக சாமான் வாங்க வந்த ஒருவனுக்கு கடை மூடும் மணிக்குப் பிறகு கால் மணிக்குள் சாமான் கொடுத்து வியாபாரம் செய்யலாம்.

(2) இவ்வாறு திறக்கப்படும் மூடப்படும்மணியை நிர்ணயிக்கும் முன் மாகாண சர்க்கார் விசாரணை நடத்தும்.

(3) மணியை நிர்ணயிக்கும்போது ஒரு ஊரி லுள்ள வெவ்வேறு கடைகளுக்கும் வெவ்வேறு பாகத்தி லுள்ள கடைகளுக்கும் வெவ்வேறு விதமான வியாபாரம் செய்யும் வெவ்வேறு கடைகளுக்கும், வெவ்வேறு மணியை மாகாண சர்க்கார் நிர்ணயிக்கலாம். மேலும் ஒரு வருடத்தில் கோடைக்காலம் குளிர் காலம் முதலிய வெவ்வேறு காலங்களுக்கு வெவ்வேறு மணியை நிர்ண யிக்கலாம்.

8. ஒரு தெருவிலுள்ள ஒரு கடை மூடப்பட வேண்டிய மணிக்குப் பிறகு, தெருவிலோ பொது இடத் திலோ அந்த கடைக்கு அருகே ஒருவன் அந்தக்கடையில் எந்தப்பொருள்கள் வியாபாரம்செய்யப்படுகிறதோ அந்தப்

பொருளை விற்கக்கூடாது. (இந்த செக்ஷனின் நோக்கம் கடை மூடியதால் ஒரு கடைக்கு வியாபாரக் குறைவு ஏற்படக்கூடாது என்றும் அந்த கடையில் சாதாரணமாக சாமான் வாங்குபவன் அடுத்த நாள் அந்த கடையில் வாங்க வேண்டும் என்பதும்)

தெருவில் பத்திரிகைகள் விற்பதை இந்த செக்ஷன் பாதிக்காது.

(1) ஒரு கடையில் வேலை செய்யும் ஒருவன் ஒரு நாளைக்கு 8 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்யக் கூடாது. ஒரு வாரத்தில் 48 மணி நேரத்துக்கு மேல் வேலை செய்யக்கூடாது.

ஆனால் முன்பிரிவில் சொல்லிய 8 மணிக்கு மேல் வேலை செய்தால் அதிகப்படியான சம்பளம் கொடுக்க வேண்டும். அப்படி அதிகப்படியான சம்பளம் கொடுத்தாலும் ஒரு தினத்தில் 10 மணிக்கு மேல் வேலை வாங்கக் கூடாது. ஒரு வாரத்தில் செய்த வேலை காலம் 50 மணிக்குமேல் போகக்கூடாது.

(2) ஒரு கடையில் வேலையாள் தொடர்ந்தாற்போல் 4 மணிக்கு மேல் வேலை செய்யக்கூடாது. 4 மணிக்கு மேல் வேலை செய்யும்போது நடுவில் குறைந்தது ஒரு மணி கால ஓய்வு நேரம் இருக்கவேண்டும்.

10. ஒரு கடை வேலையாளின் முன் வேலை நேரம், இடை ஓய்வு நேரம், பின் வேலை நேரம் மூன்றும் சேர்ந்து 12 மணிக்கு மேற்படக்கூடாது. அதாவது காலையில் அவன் வேலை ஆரம்பிக்கும் மணியிலிருந்து இரவு

வேலையை விட்டு நீங்கும் மணி வரையில் (நடுவில் உள்ள ஓய்வு நேரத்தையும் சேர்த்து 12 மணிக்கு மேற்படக் கூடாது.

11. (1) ஒவ்வொரு கடையும் ஒரு வாரத்தில் ஒரு நாள் முற்றிலும் மூடப்பட்டிருக்க வேண்டும். மூடப்படும் தினத்தை கடையில் எல்லோரும் பார்க்கும்படியாக எழுதப்பட்டிருக்க வேண்டும். எந்த கிழமை மூடப்பட வேண்டும் என்பதை வியாபாரியே தீர்மானிக்கலாம் ஆனால் ஒரு தடவை ஒரு கிழமை விடுமுறை நாள் என்று குறிப்பிட்ட பிறகு மூன்று மாதத்துக்குள் அதை வேறு கிழமையாக மாற்றக்கூடாது. விடுமுறை கிழமை மாறுதல் மூன்று மாதத்துக்கு ஒரு தடவை இஷ்டப்பட்டால் செய்யலாம்.

(2) கடையில் வேலை செய்யும் ஒவ்வொரு வேலையாளுக்கும் ஒரு வாரத்தில் ஒரு நாள் முழுவிடுமுறை விட வேண்டும்.

ஆனால் ஒரு வாரத்தில் ஆறு நாட்களுக்குக் குறைந்து (சர்க்கார் விடுமுறை நாட்களையும் சேர்த்து 6 நாள்) வேலை செய்தவனுக்கு இந்த பிரிவுப்படி விடுமுறை கட்டாயம் இல்லை. முன் உப பிரிவுப்படி கடை மூடிய தினத்தில் வேலை செய்யாத வேலைகளுக்கு மற்றொரு நாள் லீவு கொடுக்கவேண்டும் என்பதும் கட்டாயம் இல்லை.

(3) (a) சில குறிப்பிட்ட தலங்களில் சில வகையான கடைகளும், வாரம் ஒரு நாள் மூடப்படுவதுடன் ஒவ்வொரு வாரமும் மற்றொரு நாள் மாலையில், சர்க்காரால் குறிப்பிட்ட மணியில் மூடப்படவேண்டும் என்று மாகாண சர்க்கார் விளம்பரம் செய்து உத்தரவிடலாம்.

Z 811 (X:7) N4
113616

(அதாவது வேலை கடுமையான அல்லது ஆரோக்கியத்தை பாதிக்கும்படியான கடைகள் வாரம் $1\frac{1}{2}$ நாள் மூடப்பட வேண்டும் என்பது நோக்கம்.)

(b) முன் (a) உப பிரிவுப்படி விளம்பரம் செய்யப்பட்ட கடைகளில் வேலை செய்பவர்களுக்கு அதிகப்படியாக அரைநாள் விடுமுறை கொடுக்கப்படும். இந்த அரை நாள் (a) பிரிவுப்படி கடை மூடப்படும் மணியிலிருந்து ஆரம்பமாகும்.

(4) இந்த அதிகப்படியான அரை நாள் லீவை பொறுத்து வெவ்வேறு கடைகளுக்கு வெவ்வேறு மணியிலிருந்தும், வெவ்வேறு பாகங்களிலுள்ள கடைகளுக்கு வெவ்வேறு மணியிலிருந்தும், வெவ்வேறு விதமான கடைகளுக்கு வெவ்வேறு மணியிலிருந்தும் மாகாண சர்க்கார் நிர்ணயிக்கலாம்.

(5) இவ்வாறு அரைநாள் மூடப்படும் கிழமையை கடை முதலாளியே தீர்மானிக்கலாம். இந்த கிழமையையும் கடையில் எல்லோருக்கும் தெரியும்படி எழுதவேண்டும். இந்த கிழமையையும் மூன்று மாதத்துக்கு ஒரு தடவை மட்டுமே கடை முதலாளி மாற்றலாம்.

(6) இவ்வாறு கடை மூடப்படும் நாட்கள் அல்லது வார விடுமுறை நாட்கள் இவற்றிற்கு வேலையாள் சம்பளம் குறைக்கப்படக்கூடாது. தினக்கூலி கொடுக்கும்படியாக நியமிக்கப்பட்ட வேலையாட்களுக்கும் கடை மூடப்பட்ட தினங்களுக்கு கூலி கொடுக்கப்படவேண்டும்.

# அத்தியாயம் 3

## கடைகள் அல்லாத மற்ற வேலையாட்கள் வேலைசெய்யும் ஸ்தாபனங்கள்.

12. இந்த அத்தியாயத்தின் பிரிவுகள் கடைகள் அல்லாத மற்ற ஸ்தாபனங்களுக்குத்தான் கட்டுப்படும்

13. (1) மாகாண சர்க்காரால் திறப்பதற்கு குறிப்பிடும் மணிக்கு முன்னதாகவும் மூடுவதற்கு குறிப்பிடும் மணிக்கு பின்னதாகவும் திறத்தலும் மூடுதலும் கூடாது.

ஆனால் கிளப் ஹோட்டல் இவற்றுள் சாப்பிடுவதற்காக இருப்பவனுக்கு மூட வேண்டிய மணியிலிருந்து கால் மணி வரையில் உணவு அல்லது சிற்றுண்டி அளிக்கப்படலாம்.

(2) உப பிரிவு (5) பிரகாரம் மணியை குறிப்பிடுவதற்கு முன் மாகாண சர்க்கார் விசாரணை நடத்துவார்கள்.

(3) வெவ்வேறு ஸ்தாபனங்களுக்கும், வெவ்வேறு பாகங்களிலுள்ள ஸ்தாபனங்களுக்கும், வெவ்வேறு விதமான ஸ்தாபனங்களுக்கும் அல்லது வருஷத்தில் வெவ்வேறு காலங்களுக்கும் வெவ்வேறு மணியை மாகாண சர்க்கார் நிர்ணயிக்கலாம்.

14. (1) எந்த ஸ்தாபனத்தில் வேலை செய்யும் எந்த நபரும் தினம் 8 மணிக்கு மேலும் ஒரு வாரத்தில் 48 மணிக்கு மேலும் வேலை செய்யக்கூடாது.

ஒரு தினம் 8 மணிக்கு மேல் வேலை செய்தால் அதிகப்படியான சம்பளம் கொடுக்கப்படவேண்டும். ஆனால் ஒரு தினம் 10 மணிக்கு மேல் வேலை செய்யக் கூடாது. ஒரு வாரத்தில் 50 மணிக்கு மேல் வேலை செய்யக்கூடாது.

(2) இடை ஓய்வு நேரம் இல்லாமல் 4 மணிக்கு மேல் எந்த வேலையாளும் வேலை செய்யக்கூடாது.

15. முன் வேலை நேரம், இடை ஓய்வு நேரம், பின் வேலை நேரம் மூன்றும் சேர்ந்து ஒரு தினத்தில் 12 மணி நேரத்துக்கு மேற்படக்கூடாது.

16. (1) ஒரு ஸ்தாபனத்தில் வேலை செய்பவனுக்கு வாரத்தில் ஒரு நாள் விடுமுறை அளிக்கப்பட வேண்டும்.

ஆனால் ஒரு வாரத்தில் ஆறு நாட்களுக்கு குறைவாக வேலை செய்தவனுக்கு விடுமுறை கொடுக்கவேண்டும் என்பது கட்டாயம் இல்லை.

(2) மாகாண சர்க்கார் விளம்பரம் செய்து, குறிப்பிட்ட சில ஸ்தாபனங்களைப் பொறுத்து அதிகப்படி படியாக ஒரு அரைநாள் லீவு மாலையில் குறிப்பிட்ட மணியிலிருந்து கொடுக்கவேண்டும் என்று உத்திரவிடலாம்

(3) மாலையில் ஆரம்பமாகும் இந்த மணியை வெவ்வேறு ஸ்தாபனங்களுக்கும், வெவ்வேறு விதமான ஸ்தாபனங்களுக்கும், வெவ்வேறு பாகத்திலுள்ள ஸ்தாபனங்களுக்கும், வருஷத்தில் வெவ்வேறு காலங்களுக்கும், வெவ்வேறாக மாகாண சர்க்கார் நிர்ணயிக்கலாம்.

(4) முன் உப பிரிவு (1), (2) பிரகாரம் கொடுக்கப்படும். விடுமுறை நாட்களுக்கு சம்பளம் குறைக்கக்

கூடாது. தினக்கூலியாக நியமிக்கப்பட்ட ஆட்களுக்கும் இத்தினங்களுக்கு கூலி கொடுக்கப்பட வேண்டும்.

# அத்தியாயம் 4

## பாலர்கள் சிறுவர்கள் சம்பந்தமான விதிகள்.

17. எந்தக் கடையிலும் ஸ்தாபனத்திலும் 14 வயதுக்கு உட்பட்டவர்கள் (பாலர்கள்) வேலை செய்யும்படி நியமிக்கப்படக்கூடாது.

18. 14 வயது பூர்த்தியான ஆனால் 17 வயது பூர்த்தியாகாத சிறுவர்கள் எந்தக் கடையிலும் ஸ்தாபனத்திலும் காலை 6 மணிக்கு முன்னதாகவும் மாலை 7 மணிக்கு பின்னதாகவும் வேலை செய்யும்படி நியமிக்கக்கூடாது.

19. முன் செக்ஷன் 18 படி நியமிக்கப்பட்ட சிறுவர்கள் ஒரு தினம் 7 மணிக்கு மேலும், ஒரு வாரத்தில் 42 மணிக்கு மேலும் வேலை செய்யும்படி செய்யக்கூடாது. அதிகப்படி சம்பளம் கொடுத்து கூட இவர்களிடம் அதிக மணி வேலை வாங்கக்கூடாது.

# அத்தியாயம் 5

## தேக ஆரோக்கியமும் அபாய பாதுகாப்பும்.

20. கடை அல்லது ஸ்தாபனம் சுத்தமாயிருக்க வேண்டும். சாக்கடை கக்கூஸ் முதலியவற்றின் துர்காற்றம் இல்லாமலிருக்க வேண்டும். குறிப்பிட்ட காலங்

களில் குறிப்பிட்ட முறைகளில் அவை சுத்தம் செய்யப் பட வேண்டும். சுவர்களுக்கு சுண்ணும்பு பூசுவது, சாயம் பூசுவது, வர்ணம் பூசுவது, மர பாகங்களுக்கு வர்ணம் பூசுவது, வார்னிஷ் தீத்துவது, துர்நாற்றத்தைப் போக்க ரசாயனப் பொருள்கள் (பினேல், பிளீச்சிங் பவுடர்) உபயோகிப்பது இவற்றைப்பற்றியும் விதிகள் இயற்றப் படலாம்.

21. கடை அல்லது ஸ்தாபனத்துக்கு போதுமான காற்றோட்ட வசதி இருக்க சன்னல்களின் அளவு முதலிய வற்றைப்பற்றி விதிகள் இயற்றப்படலாம்.

22. (1) வேலை நேரங்களில் கடை அல்லது ஸ்தா பனம் போதுமான வெளிச்சம் உடையதாயிருக்க வேண்டும்.

(2) ஒரு இன்ஸ்பெக்டருடைய அபிப்பிராயப் பிரகாரம் ஒரு கடை அல்லது ஸ்தாபனம் போதுமான காற்றோட்ட, வெளிச்ச வசதி இல்லாமலிருக்கிறது என்று கருதினால் அவர் வெளிச்ச காற்றோட்ட வசதிக்காக குறிப்பிட்ட சீர்திருத்தத்தை குறிப்பிட்ட காலத்துக்குள் செய்து முடிக்கும்படி உத்திரவிடலாம்.

23. தீ விபத்தைத் தடுக்கத் தகுந்த முன்ஜாக்கிரதை ஏற்பாடுகள் செய்யும்படி கடைபிடிக்க வேண்டிய விதிகள் இயற்றப்படும்.

24. இன்ஸ்பெக்டர் உத்திரவின் மீது மாகாண சர்க்காரால் குறிப்பிடும் அதிகாரியிடம் உத்திரவு பிறப் பித்த தேதியிலிருந்து குறிப்பிட்ட காலத்துக்குள் அப்பீல் செய்துகொள்ளலாம். அப்பீல் அதிகாரியின் முடிவே முடிவானது.

# அத்தியாயம் 6

## சம்பளத்துடன் விடுமுறை.

25. (i) தொடர்ச்சியாக 12 மாதம் வேலை செய்த ஒரு வேலையாளுக்கு அடுத்த 12 மாதத்தில் 12 நாட்கள் சம்பளத்துடன் லீவு உரிமையுண்டு. இந்த லீவை எடுத்துக்கொள்ளாமல் சேமித்துக்கொள்ளலாம். ஆனால் 24 நாட்களுக்கு மேல் லீவை சேமித்துவைக்க முடியாது. (அதாவது வருஷத்துக்கு 12 நாட்கள் வீதம் இரண்டு வருஷம் தொடர்ச்சியாக வேலை செய்தால் 24 நாட்கள் லீவு கிடைக்கும். இதை மூன்றாவது வருஷத்தில் எடுத்துக்கொள்ளலாம். மூன்றாவது வருஷமும் லீவு எடுக்காவிட்டால் அந்த வருஷத்துக்கு லீவு கிடைக்கவேண்டியதை இந்த 24 நாட்களுடன் கூட்ட முடியாது. லீவை உபயோகித்துவிட்டால் பிறகு லீவு சேமிக்கலாம்.)

இந்த உப பிரிவை பொறுத்து இந்த சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னால் தொடர்ச்சியாக வேலை செய்ததையும் லீவுக்காக கணக்கு எடுத்துக்கொள்ளலாம். ஆனால் 12 மாதங்களுக்கு மேல் கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாது. (அதாவது 1—4—47உக்கு முன்னிலிருந்து எவ்வளவு காலம் தொடர்ச்சியாக வேலை செய்திருந்தபோதிலும் 1—4—48ல் 12 மாதம் வேலை செய்ததாக கருதப்படும். 1—10—47உயிலிருந்து தொடர்ச்சியாக வேலை செய்திருந்தால் 1—4—48ல் 6 மாதம் தொடர்ச்சியாக வேலை செய்ததாக கருதப்படும்.)

(ii) இதைத் தவிர 1—4—48உயிலிருந்து தொடர்ச்சியாக வேலை செய்யும் ஒவ்வொரு 12 மாத

காலத்திலும், (a) தேக அசௌக்கிய காரணத்துக்காக வும், விபத்து காரணமாகவும் 12 நாட்களுக்கு மேற்படாத லீவும் (b) தகுந்த காரணத்துக்காக 12 நாட்களுக்கு மேற்படாத "காசுவல்" (சாதாரண) லீவும் உண்டு. இவைகளும் சம்பளத்துடன் கொடுக்கப்பட வேண்டும்.

(iii) உப பிரிவு (1) பிரகாரம் சம்பளம் மீத்து வைத்த ஒருவனை முதலாளி வேலையை விட்டு நீக்கினல், அல்லது வேலையாள் லீவு கேட்டு முதலாளி அதை மறுத்து, பிறகு லீவு எடுப்பதற்கு முன் வேலையாள் வேலையைவிட்டு நீக்கினல், இந்த லீவு நாட்களுக்கு உரிய சம்பளத்தை முதலாளி கொடுக்கவேண்டும்.

(iv) உப பிரிவு (2) பிரகாரம் லீவு சம்பாதித்த ஒருவன் வியாதியாயிருக்கும்போது அல்லது விபத்திலிருக் கும்போது முதலாளி அவனை வேலையை விட்டு நீக்கினல் இந்த லீவுக்குரிய சம்பளத்தையும் முன் பிரிவு 3 படி உள்ள சம்பளத்தையும் முதலாளி கொடுக்க வேண்டும்.

(v) தொடர்ச்சியான 12 மாதத்தை கணக்கிடும் போது (i) வியாதி, விபத்து, சட்டப்படியான லீவுகள் இவற்றினல் ஆஜராகாத காலத்தினல் தொடர்ச்சி பாதிக் கப்படாது. ஆனல் இவை மூன்றும் சேர்ந்து 90 நாட் களுக்கு மேற்படக்கூடாது. (ii) கடை அல்லது ஸ்தாப னம் மூடப்பட்ட காலம் தொடர்ச்சியை பாதிக்காது. (iii) சட்டவிரோதமல்லாத வேலை நிறுத்தம் தொடர்ச் சியை பாதிக்காது. (iv) 30 நாட்களுக்கு மேற்படாத எதிர்பாராத விதமாய் வேலையற்ற நாட்களும் தொடர்ச் சியை பாதிக்காது.

(vi) (1)முதல்(5)உப பிரிவுகளின் நன்மைகளை பள்ளிக்கூடத்தை சேர்ந்த ஹாஸ்டல்களில் வேலை செய்ப வர்களுக்கும் கொடுக்கப்படும். ஆனால் ஒரு வருஷத்தில் அவர்கள் வேலை செய்யும் காலத்துக்கு விகிதப்படி குறைக் கப்படும். (அதாவது, ஹாஸ்டல் 10 மாதம் இருந்தால் லீவும் 10 நாட்கள்.)

(vii) உபபிரிவு (6)ஐ எப்படி நடைமுறையில் அமுலுக்கு குறிப்பிட்ட ஸ்தாபனத்துக்கு கொண்டு வருவது என்பதை மாகாண சர்க்கார் தீர்மானிக்கும்.

26. சம்பளத்துடன் லீவு கொடுக்கப்படும்பொழுது கொடுக்கும் லீவு சம்பளம், லீவுக்கு முன் மூன்று மாதத்தில் வேலையாள் வாங்கிய சராசரி சம்பளம் ஆனால் இதில் அதிகப்படி மணிக்கு வாங்கிய அதிகப்படி சம்பளத்தை கணக்கிடக்கூடாது.

27. வருஷத்தில் வேலையாளுக்கு சம்பளத்துடன் கிடைக்கும் லீவு காலத்தையும், அதை சேமித்து வைக்கும் காலத்தையும் குறிப்பிட்ட வகையான கடைகள் அல்லது ஸ்தாபனங்களுக்கு, விளம்பரம் செய்து மாகாண சர்க்கார் அதிகரிக்கலாம்.

28. இந்த பிரிவின்படி ஒரு வேலையாளுக்கு முதலாளி கொடுக்கவேண்டிய சம்பளம் விஷயமாக, வேலையாள் சார்பாக இன்ஸ்பெக்டர் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

# அத்தியாயம் 7

## சம்பளம்.

29. ஒவ்வொரு முதலாளியும் அவன்கீழ் வேலை செய்யும் வேலையாட்களுக்கு சம்பளம் அல்லது இந்த சட்டப்படி கொடுக்க வேண்டிய பணத்துக்கு ஜவாப்தாரி.

30. (i) சம்பளம் கொடுக்கும் காலத்தை முதலாளி நிர்ணயிப்பார். (அதாவது வாரச்சம்பளம், மாதச் சம்பளம் போன்று.)

(ii) ஆனால் குறைந்தது ஒரு மாதத்துக்கு ஒரு தடவையாவது சம்பளம் கொடுக்கப்படவேண்டிய காலமாயிருக்க வேண்டும்.

31. ஒரு தினத்தில் குறிப்பிட்ட மணிக்கு மேல் அதிகப்படியாக வேலை செய்யும் காலத்துக்கு, சாதாரணமாக ஒருமணி நேரத்துக்கு கொடுப்பதைபோல் இரண்டு மடங்கு சம்பளம் கொடுக்க வேண்டும்.

32. (i) ஒரு வேலையாளுக்கு கொடுக்க வேண்டிய சம்பளம், வாரம் அல்லது மாதம் முடிந்த 5 தினத்துக்குள் கொடுக்கப்படவேண்டும்.

(ii) ஒரு வேலையாளை முதலாளி வேலையை விட்டு நீக்கினால் அவ்வாறு நீக்கப்பட்ட தேதியிலிருந்து அடுத்தநாள் முடிவுக்குள் அவனுக்குச் சேர வேண்டிய சம்பளத்தை கொடுக்கவேண்டும்.

(iii) மாகாண சர்க்கார் குறிப்பிட்ட முதலாளிகளை குறிப்பிட்ட வேலையாட்களைப்பொறுத்து குறிப்பிட்ட

கிடங்குகளின்மேல் இந்த பிரிவிலிருந்து குறிப்பிட்ட அளவு விதிவிலக்கு செய்யலாம்.)

(iv) சம்பள பட்டுவாடா வேலை நாட்களில்தான் செய்யப்பட வேண்டும். (லீவு நாட்களில் சம்பளம் பட்டுவாடா செய்யப்படக்கூடாது.

33. சம்பளம் செலாவணியிலிருக்கும் நாணயங்களாகவோ நோட்டுகளாகவோ இரண்டும் சேர்த்தோ—கொடுக்கப்படலாம்.

34. (i) இந்த சட்டத்தின்படி குறைக்கக்கூடிய பணம் ஏதாவது இருந்தால் அது சம்பளத்திலிருந்து குறைக்கலாமே தவிர, வேறு குறைவு ஒன்றும் இல்லாமல் சம்பளத்தை வேலையாளிடம் கொடுக்கவேண்டும்.

வேலையாள் முதலாளிக்கு பணம் கொடுத்தாலும் அதுவும் சம்பளத்திலிருந்து குறைத்து கொடுத்ததாகவே கருதப்படும்

(ii) வேலையாளின் சம்பளத்திலிருந்து கீழ்க் கண்டவை குறைக்கப்படலாம்.

(a) அபராதம்.

(b) வேலைக்கு லீவு இல்லாமல் வராத நாட்களுக்கு சம்பள பிடித்தம்.

(c) ஒரு வேலையாளின் பொறுப்பில்விடப்பட்ட ஒரு பொருளுக்கு அவனுடைய அஜாக்கிரதையினாலோ தவறினாலோ ஏற்பட்ட நஷ்டம், அல்லது ஒரு வேலையாள் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய பணத்தில் அவனுடைய அஜாக்கிரதையினாலோ தவறினாலோ ஏற்பட்ட நஷ்டம்.

(d) முதலாளியினால் வேலையாளுக்கு விடப்பட்ட குடியிருப்பு வீட்டின் வாடகை.

(e) மாகாணசர்க்காரின் உத்தரவுக்கு ஏற்பட்ட வேலையாட்களுக்கு அளித்த வேறு வசதிகளுக்காக பிடித்தம்.

(f) அட்வான்சு கொடுத்ததற்காக பிடித்தம் தவறுதலாக முன் அதிக சம்பளம் கொடுத்ததற்காக பிடித்தம்.

(g) வேலையாள் சம்பளம் வருமானவரி செலுத்தக்கூடிய தொகையிருந்தால் அந்த வருமான வரிக்கு கழிக்க வேண்டிய பணம்

(h) கோர்ட்டிலிருந்து சம்பளத்திலிருந்துபணம் பிடிக்கும்படி உத்திரவிருந்தால் அதன்படி பிடித்தம்.

(i) புரோவிடண்டுபண்டு சம்பந்தமாக பிடித்தம்.

(j) கோவாபரேடிவ் சொசைடி சம்பந்தமாக பிடித்தம் அல்லது இன்ஸ்யூரன்ஸ் சம்பந்தமாக பிடித்தம்.

(k) வேலையாள் பேருக்கு கவர்ன்மெண்டு கடன் பத்திரங்கள் முதலியவை வாங்க வேலையாளின் எழுத்து மூலமான சம்பந்தம் பெற்று பிடித்தம்.

35. (i) வேலையாள்மீது அபராதம் போடுவதற்கு முன்னதாக, முதலாளி, மாகாண சர்க்கார் அல்லது மாகாண சர்க்காரால் நியமிக்கப்பட்டிருக்கும் உத்யோகஸ்தரிடம் சம்மதம் பெற்று, குறிப்பிட்ட செய்கை அல்லது தவறுதல்களுக்கு, அபராதம் விதிக்கப்படக்கூடியது என்று உத்திரவிடலாம்.

(ii) வேலையாட்கள் வேலை செய்யும் இடத்தில் குறிப்பிட்ட செய்கைகள் அல்லது தவறுதல்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்பதை தெரியும்படி எழுதப் பட்டிருக்கவேண்டும்

(iii) அபராதம் விதிப்பதற்கு முன், அபராதம் ஏன் விதிக்கப்படக்கூடாது என்பதற்கு காரணம் சொல்ல வேலையாளுக்கு வசதிகொடுக்க வேண்டும். அல்லது அர சாங்கத்தாரால் விதிகள் இயற்றப்பட்டால் அதன்படி விசாரணை நடத்தவேண்டும்.

(iv) மாத, அல்லது வார சம்பளம் கொடுக்கப் படும் ஒரு வேலையாளுக்கு, முறையே ஒரு மாதத்தில் அல்லது ஒரு வாரத்தில் விதிக்கப்படும் மொத்த அபரா தம் அந்த மாத அல்லது வார சம்பளத்தில் 32-ல் ஒரு பங்குக்கு மேற்படக்கூடாது (அதாவது ரூபாய்க்கு அரையணவுக்கு மேற்படக்கூடாது)

(v) 15 வயது பூர்த்தியாகாத வேலையாளுக்கு அபராதம் விதிக்கப்படககூடாது.

(vi) அபராத தொகை அது விதிக்கப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் வசூல் செய்யப்படா விட்டால் பிறகு வசூல் செய்யக்கூடாது.

(vii) ஒவ்வொரு அபராதமும் எந்த செய்கை அல்லது அஜாக்கிரதைக்காக விதிக்கப்பட்டதோ அந்த செய்கை அல்லது அஜாக்கிரதை நடந்த தேதியன்று விதிக்கப்பட்டதாக கருதப்படும்.

(viii) அபராதம் சம்பந்தமாக சர்க்காரால் விதிக் கப்பட்டிருக்கும் முறையில் ஒரு ரிஜிஸ்டர் முதலாளி

வைத்திருக்கவேண்டும். இதில் அபராத தொகை, அதன் வசூல் முதலியவை எழுதபட வேண்டும். இந்த அபராத தொகை, சர்க்காரின் அநுமதி பெற்ற முறையில், அந்த ஸ்தாபனத்தில் வேலைசெய்பவர்களின் பொது நன்மைக்காக உபயோகப்படுத்தவேண்டும்.

ஒரே மானேஜ்மெண்டுக்குள் பல பகுதியாக வேலையாட்களிருந்தால் அபராத தொகை பொதுவான ரிஜிஸ்டரில் வரவு வைத்து பொது கணக்காக வைக்கப்படலாம். ஆனால் இந்த பணம் சர்க்கார் அநுமதி பெற்றபடி பொது நன்மைக்காகவே உபயோகப்படுத்தவேண்டும்.

36. (i) வேலையாள் நிபந்தனைபடி வேலை செய்ய வேண்டிய இடத்துக்கு முழுநாளோ, அல்லது அதன் ஒரு பகுதியோ, வராமலிருந்தால் அதற்கு சம்பளப் பிடித்தம் செய்யலாம்

(ii) இந்த சம்பளப் பிடித்தம் அவன் வாராத வேலை அல்லது நாள், இதற்கு அவன் சம்பள விகிதப்படி எவ்வளவு சம்பளமோ அதைவிட அதிகம் கூடாது.

ஆனால் பத்து அல்லது பத்துக்கு மேற்பட்ட வேலையாட்கள் ஒன்று சேர்ந்து. காரணமில்லாமல், வேலை ஒப்பந்தப்படி கொடுக்கவேண்டிய முன் நோட்டீஸ் கொடுக்காமல் வேலையைவிட்டு நின்றால், அப்படி நின்ற ஒவ்வொரு தொழிலாளிக்கும் எத்தனை நாள் நோட்டீஸ் கொடுக்கப்பட வேண்டுமோ அத்தனை நாட்களுக்குரிய, ஆனால் எட்டு நாட்களுக்கு மேற்படாத, சம்பளத்தை பிடிக்கலாம்.

இந்த உபபிரிவை பொறுத்த வரையில் ஒரு வேலையாள் கடை அல்லது ஸ்தாபனத்துக்கு வந்து தகுந்த காரணம் இல்லாமல் வேலை செய்ய மறுத்தாலும் உள்ளிருந்து வேலை நிறுத்தம் செய்தாலும் வேலைக்கு வாராததாகவே கருதப்படுவான்.

37. (i) செக்ஷன் 34(2) (c) பிரகாரம் பிடிக்கப்படும் பணம் முதலாளியின் நஷ்டத்தைவிட அதிகமாயிருக்கக்கூடாது. இதற்கும் சம்பளம் பிடித்தம் ஏன் செய்யக்கூடாது என்று வேலையாள் முகாந்தரம் கூற வசதியளிக்கவேண்டும் அல்லது சர்க்கார் விதிக்கும் முறையில் விசாரணை நடத்தவேண்டும்.

(ii) சர்க்காரால் சொல்லும் முறையில் ஒரு ரிஜிஸ்டரில் இத்தகைய சம்பளப் பிடித்தத்தையும் வசூலையும் எழுதவேண்டும்.

38. செக்சன் 34 (c) (d) (e) பிரகாரம் பணம் பிடிப்பதற்கு, குடியிருப்பு வசதியும் வேறு வசதியும் வேலையாளால் ஒப்புக்கொள்ளப்பட்டு வேலைகொடுப்பதற்கு அது ஒரு நிபந்தனையாகவும் இருந்திருக்க வேண்டும். இந்த பிடித்தம் வீட்டு வாடகை, வேறு வசதியின் மதிப்பு இதற்கு அதிகமாயிருக்கக்கூடாது. 34 (2) (e) பிரகாரம் பிடிக்கும் பணம் மாகாண சர்க்கார் விதிக்கும் நிபந்தனைக்கு உட்பட்டிருக்கவேண்டும்.

39. செக்ஷன் 34(2) (L) பிரகாரம் பிடிக்கும் பணம் கீழ் கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும்

(a) வேலை ஆரம்பமாவதற்கு, முன்னால் கொடுக்கப்பட்ட முன் பணம், முதன் முதலில் கொடுக்கப் படும் முதல் முழு வார அல்லது முதல் முழு மாத சம்பளத்தில் பிடிக்கப்படும். ஆனால் பிரயாண செலவு களுக்காக கொடுக்கப்பட்ட முன்பணம் இவ்வாறு சம் பளத்தில் குறைத்து வசூலிக்கப்படக்கூடாது.

(b) வேலையாட்களுக்கு சம்பளத்திற்கு முன் பணம் எவ்வளவு கொடுக்கலாம் என்பதைப் பற்றியும் அதை சிறு தொகைகளாக மாதா மாதம் அல்லது வாரா வாரம் எப்படி வசூலிப்பது என்பதைப் பற்றியும் மாகாண சர்க்கார் விதிகள் இயற்றலாம். முதல் மாத அல்லது வார சம்பளத்தைவிட அதிகமான முன் பணத்தை அந்த விதிகள்படி வசூலிக்கவேண்டும்.

40 செக்ஷன் 34(2) (j) (k) பிரகாரம் பிடிக்கப் படும் பணம் மாகாண சர்க்கார் விதிக்கும் நிபந்தனை களுக்கு உட்பட்டிருக்கவேண்டும்.

41. (i) ஆறு மாதங்களுக்கு குறையாமல் தொடர்ச்சியாக வேலையிலிருக்கும் வேலையாளை தகுந்த காரணத்துடன் குறைந்தது ஒரு மாத நோட்டீஸ் அல்லது நோட்டீசுக்கு பதிலாக ஒரு மாத சம்பளம் கொடுத்து தான் நீக்க வேண்டும் ஆனால் நடத்தை குறைவு என்று காரணத்துக்காக விசாரணை செய்து தகுந்த சாக்ஷியத்தின் மேல் வேலையைவிட்டும் நீக்கப்படும் ஒரு வேலையாளுக்கு நோட்டீஸ் அவசியமில்லை.

(ii) அவ்வாறு வேலையிலிருந்து நீக்கப்பட்ட வேலையாள், சர்க்காரால் நியமிக்கப்படும் அதிகாரியிடம்,

குறிப்பிட்ட காலத்துக்குள், தன்னை நீக்குவதற்கு தகுந்த காரணம் இல்லையென்றும் தான் நடத்தை குறைவாக நடக்கவில்லை என்றும் அப்பீல் செய்துகொள்ளலாம்.

(iii) அப்பீல் அதிகாரியின் முடிவு முடிவானது இது முதலாளி வேலையாள் இருவரையும் கட்டுப்படுத்தும்.

# அத்தியாயம் 8

## இன்ஸ்பெக்டர்கள்

## நியமனமும் அதிகாரமும்

42. மாகாண சர்க்கார் கெஜட்டில் பிரசுரம்செய்து சர்க்கார் அதிகாரிகள் யாரையாவது குறிப்பிட்ட எல்லையில் இந்த சட்டத்தை பொறுத்து இன்ஸ்பெக்டர்களாக நியமிக்கலாம்.

43. நியாயமான எந்த காலத்திலும் இன்ஸ்பெக்டர் தன் சிப்பந்திகளுடன் ஒரு கடை அல்லது ஸ்தாபனத்துக்குள் நுழைந்து பார்வையிடலாம். ரிஜிஸ்டர்களையும் ரிகார்டுகளையும் பார்க்கலாம்.

44. ஒவ்வொரு இன்ஸ்பெக்டரும் இந்தியன் பினல் கோர்ட் செக்ஷன் 21 பிரகாரம் சர்க்கார் உத்தியோகஸ்தராக கருதப்படுவார்.

# அத்தியாயம் 9

## குற்றங்களுக்கு தண்டனை.

45. (i) செக்சன் 7, 8, 9, 10, 11, 13. 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 25, 26, 29 முதல் 41, 47

விதிகளை மீறும் முதலாளி, முதல் தடவை ரூ. 25/-க்கு மேற்படாத அபராதம் விதிக்கப்படலாம். அதற்கு அடுத்தாற்போல்மீறும் ஒவ்வொரு தடவையும்ரூ 250/-க்கு மேற்படாத தண்டனை விதிக்கப்படலாம்.

(ii) செக்ஷன் 8 ஐ மீறுபவர் முதல் தடவை ரூ. 10/-க்கு மேற்படாத அபராதமும் அதற்கு அடுத்த ஒவ்வொரு தடவையும் ரூ. 100/-க்கு மேற்படாத அபராதமும் விதிக்கப்படலாம்.

46. இன்ஸ்பெக்டர் தன் கடமையை நிறைவேற்றுவதை தடுப்பவர், அல்லது இன்ஸ்பெக்டருக்கு அவர் கடமையில் உதவி செய்பவரை தடுப்பவர் அல்லது இன்ஸ்பெக்டர் சட்டப்படி செய்த உத்திரவுகளை கீழ்படியாதவர் ரூ. 250/-க்கு மேற்படாத அபராதம் விதிக்கப்படலாம்.

# அத்தியாயம் 10

## சில்லறை விஷயங்கள்.

47. மாகாண சர்க்காரின் பொது அல்லது பிரத்தியேக உத்திரவுபடி முதலாளி குறிப்பிட்ட ரிஜிஸ்டர்களையும், ரிகார்டுகளையும வைத்திருக்க வேண்டும். குறிப்பிட்ட நோட்டீஸ்களை கடையில் அல்லது ஸ்தாபனத்தில் தொங்கவிட வேண்டும்.

48. (i) மாகாண சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்து அதன் கீழ் உள்ள ஒரு உத்தியோகஸ்தர் 49 செக்ஷன் அல்லாத மற்ற அதிகாரத்தை தன் சார்பாக நடத்த உத்திரவிடலாம்.

(ii) இவ்வாறு கொடுக்கப்பட்ட அதிகாரம் மாகாண சர்க்காரின் மேற்பார்வைக்கும் அதிகாரத்துக்கும் உட்பட்டது. அதனால் மாற்றக்கூடியது அவ்வாறு நியமிக்கப்பட்டவரின் செய்கைகளையும் உத்திரவுகளையும் பரிசிலனை செய்ய மாகாண சர்க்காருக்கு அதிகாரம் உண்டு.

49. (i) இந்த சட்டத்தை அமுலுக்கு கொண்டு வர விதிகளை (ரூல்) மாகாண சர்க்கார் பிறப்பிக்கலாம்.

(ii) அம்மாதிரி விதிகளை பிறப்பிக்கும் போது அவற்றை மீறுபவர் ரூ. 50/-க்கு மேற்படாத அபராதம் விதிக்கப்படுவார் என்று உத்திரவிடலாம்.

(iii) இந்த மாதிரி விதிகள் பிறப்பிப்பதற்கு முன்னதாக அவை கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட வேண்டும்.

(iv) இந்த விதிகள் போர்ட் செயிண்ட்ஜார்ஜு கெஜட்டில் பிரசுரம் செய்யப்படும். அவ்வாறு பிரசுரம் செய்யப்பட்டதும் இந்த சட்டத்துடன் இயற்றப்பட்டதாக அதிகாரம் அடையும்.

50. இந்த சட்டம் அமுலுக்கு வரும் தேதியில் யாதொரு வேலைபாளுக்கு அதிக சாதகமான உரிமைகள் வேறு சடங்களின் மூலமாயோ, ஒப்பந்த மூலமாயோ, வழக்கத்தின் மூலமாயோ இருந்தால் அந்த உரிமை இந்த சட்டத்தால் குறைக்கப்படாது.

51. இந்த சட்டம் யாதொரு ஸ்தாபனத்துக்கோ யாதொரு வேலைகாளுக்கோ செல்லுபடியாகுமா அல்லது செக்ஷன் 50 ஓரு குறிப்பிட்ட நபர் அல்லது ஸ்தாப

னத்துக்கு பொருந்துமா என்ற விவாதம் ஏற்பட்டால் அதை லேபர் கமிஷனர் முடிவு செய்வார் அந்த முடிவைப் பற்றி கோர்ட்டில் தாவா செய்ய முடியாது.

52. குறிப்பிட்ட திருவிழா நாட்கள், சந்தை நாட்கள், தொடர்ச்சியாக பொது விடுமுறைகள் வரும் நாட்கள் இவற்றின் போது இந்த சட்டம் பூராவையுமோ அல்லது அதன் சில பிரிவுகளேயோ தற்காலிகமாக அமுலில்லாமல் மாகாண சர்க்கார் விளம்பரம் செய்து உத்திரவிடலாம்.

53. இந்த சட்டம் அமுலுக்கு வரும் 1—4—48-ல் இருந்து இதனுல் கட்டுப்படும் ஸ்தாபனத்தை பொறுத்து, 1942 ஆம் வருஷத்திய வார விடுமுறை சட்டம் (மத்திய 1942 ஆம் வருஷ XVIII ஆக்டு) கட்டுப்படுத்தாது.

## இவர்களுக்கு இச்சட்டம் இல்லை.

"செக்ஷன் 6-ன் கீழ் G. O. MS. No. 1410 Development, 20—3—1948 படி, கீழ்க்கண்டவர்களுக்கு இச்சட்டம் அமுலுக்கு வராது.

1. வக்கில் அபீசில் அந்தத் தொழில் விஷயமாக வேலை செய்பவர்கள்.

2. டாக்டர்களிடம் அந்தத் தொழில் விஷயமாக வேலை செய்பவர்கள்.

3. டாக்டருடைய மருந்து சாலையில் அதன் சம்பந்தமாக வேலை செய்பவர்கள்.

4. வியாதியஸ்தர், குழந்தைகள், அநாதை, பைத்தியம் இவர்களைப் பராமரிக்கும் தனிப்பட்ட ஆஸ்பத்திரி அல்லது ஸ்தாபனங்களில் அதன் சம்பந்தமாக வேலை செய்பவர்கள்.

5, இந்த சட்டத்தின் 4! வது செக்ஷன் படி கண்டிராக்டாக, ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும் வேலைக்கு நியமிக்கப்பட்டவர்கள்."

11361/5

## எமது வெளியீடுகள்!

★

| | |
|---|---|
| சுதந்திரப் போர் | 1-4-0 |
| கோவிலைத் திறவுங்கள் | 0-8-0 |
| சுதந்திர தீபம் | 0-5-0 |
| ஜெயப்பிரகாஷ் | 0-4-0 |
| மறைந்தது மாணிக்கம் | 0-2-0 |

★

ஏஜண்டுகளுக்கு
தாராளமான கமிஷன் உண்டு

★

—: விவரங்களுக்கு :—

# தியாகக்கொடி பதிப்பகம்

துறையூர் :: திருச்சி ஜில்லா

PRINTED AT THE STAR PRESS, TURAIYUR.